## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## முதல் பத்து

### நான்காம் திருவாய்மொழி - அஞ்சிறைய
### எம்பெருமானது பிழை பொறுக்கும் குணத்தைப் பற்றாசாகக் கொண்டு தலைமகள் பறவை முதலியவற்றைத் தூது செல்ல விடுதல்

** அஞ்சிறைய மட நாராய்! * அளியத்தாய்! * நீயும் நின்
அஞ்சிறைய சேவலுமாய் * ஆவா! என்று எனக்கருளி **
வெஞ்சிறைப் புள் உயர்த்தார்க்கு * என் விடு தூதாய்ச் சென்றக்கால் *
வன் சிறையில் அவன் வைக்கில் * வைப்புண்டால் என் செய்யுமோ? 1

என் செய்ய தாமரைக் கண் * பெருமானார்க்கு என் தூதாய் *
என் செய்யும் உரைத்தக்கால்? * இனக் குயில்காள்! நீர் அலிரே? **
முன் செய்த முழு வினையால் * திருவடிக் கீழ்க் குற்றேவல் *
முன் செய்ய முயலாதேன் * அகல்வதுவோ? விதி இனமே 2

விதியினால் பெடை மணக்கும் * மென்னடைய அன்னங்காள்! *
மதியினால் குறள் மாணாய் * உலகிரந்த கள்வர்க்கு **
மதியிலேன் வல்வினையே * மாளாதோ? என்று * ஒருத்தி
மதி எல்லாம் உள் கலங்கி * மயங்கும் ஆல் என்னீரே 3

என் நீர்மை கண்டிரங்கி * இது தகாது என்னாத *
என் நீல முகில் வண்ணற்கு * என் சொல்லி யான் சொல்லுகேனோ? **
நன்னீர்மை இனி அவர்கண் * தங்காது என்றொரு வாய்ச்சொல் *
நன்னீல மகன்றில்காள்! * நல்குதிரோ? நல்கீரோ? 4

நல்கித் தான் காத்து அளிக்கும் * பொழில் ஏழும் வினையேற்கே *
நல்கத் தான் ஆகாதோ? * நாரணனைக் கண்டக்கால் **
மல்கு நீர்ப் புனற்படப்பை * இரை தேர் வண் சிறு குருகே!*
மல்கு நீர் கண்ணேற்கு * ஓர் வாசகம் கொண்டு அருளாயே 5

அருளாத நீர் அருளி * அவர் ஆவி துவரா முன் *
அருள் ஆழிப் புள் கடவீர் * அவர் வீதி ஒரு நாள் என்று **
அருள் ஆழி அம்மானைக் * கண்டக்கால் இது சொல்லி
அருள் * ஆழி வரிவண்டே! * யாமும் என் பிழைத்தோமே? 6

என்பு இழை கோப்பது போலப் * பனி வாடை ஈர்கின்ற *
என் பிழையே நினைந்தருளி * அருளாத திருமாலார்க்கு **
என் பிழைத்தாள் திருவடியின் * தகவினுக்கு என்றொரு வாய்ச்சொல் *
என்பு இழைக்கும் இளங்கிளியே! * யான் வளர்த்த நீ அலையே? 7

நீ அலையே? சிறு பூவாய்! * நெடுமாலார்க்கு என் தூதாய் *
நோய் எனது நுவல் என்ன * நுவலாதே இருந்து ஒழிந்தாய் **
சாயலொடு மணி மாமை * தளர்ந்தேன் நான் * இனி உனது
வாய் அலகில் இன்னடிசில் * வைப்பாரை நாடாயே 8

நாடாத மலர் நாடி * நாள் தோறும் நாரணன் தன் *
வாடாத மலர் அடிக் கீழ் * வைக்கவே வகுக்கின்று **
வீடாடி வீற்றிருத்தல் * வினை அற்றது என் செய்வதோ? *
ஊடாடு பனி வாடாய்! * உரைத்து ஈராய் எனதுடலே 9

உடல் ஆழிப் பிறப்பு வீடு * உயிர் முதலா முற்றுமாய் *
கடல் ஆழி நீர் தோற்றி * அதன் உள்ளே கண் வளரும் **
அடல் ஆழி அம்மானைக் * கண்டக்கால் இது சொல்லி *
விடல் ஆழி மட நெஞ்சே! * வினையோம் ஒன்றாம் அளவே 10

** அளவியன்ற ஏழ் உலகத்தவர் * பெருமான் கண்ணனை *
வள வயல் சூழ் வண்குருகூர்ச் * சடகோபன் வாய்ந்து உரைத்த **
அளவியன்ற அந்தாதி * ஆயிரத்துள் இப்பத்தின் *
வள உரையால் பெறல் ஆகும் * வானோங்கு பெரு வளமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---